7

# பக்தி கோரப்பட்டது!

## (எபிரெயர் 5:1–7)

*கீழ்ப்படிய வேண்டிய பிரதானக் கட்டளை எது என கேட்கப்பட்ட கேள்விக்கு, நம்முடைய கர்த்தர் உடனடியாக தனிப்பட்ட பக்தி என்பது பற்றி பேசினார்: "... 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக' " (மத்தேயு 22:37). ஒருவர் தேவனுக்கு செலுத்தும் பயபக்தியில் மூழ்கி அவருக்குச் செய்யும் ஊழியத்திலும் பிற மனிதர்களுக்குச் செய்யும் சேவையிலும் விளங்கப் பண்ணும்போது, வேத வசனங்களின் மற்ற போதனைகளைப் பின்பற்றுதல் என்பது அந்த ஒப்புக்கொடுத்தலிலிருந்து இயற்கையாகவே முளைத்து எழும்புகிறது என்று கிறிஸ்து கவனித்துள்ளார் (மத்தேயு 22:40).*

*ஒரு இளவயது பெண்ணுக்கு அவளுடைய எதிர்கால கணவன் எழுதும் கடிதத்துக்கு ஒப்பாக கிறிஸ்தவர்களின் ஒப்புக்கொடுத்தல் அவர்களுடைய விசுவாசத்தில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இளைஞன் கம்யூனிஸ்ட் தத்துவத்துக்கு "மனமாற்றப் பட்டிருந்தான்," எனவே கட்சிக்காக தன்னை அர்ப்பணம் செய்த அவன் தனது இந்த புதிய காரணத்துக்காக தன்னை முழுமையாய் அதற்கு அர்ப்பணிக்க ஏதுவாக தனது நட்பை முறித்துக் கொள்ளும் பொருட்டு அந்தக் கடிதத்தை எழுதினான். அந்த இளைஞனின் அர்ப்பணிப்பின் அளவு எவ்வளவு பெரிதாயிருந்தது என்பதை அவனுடைய வார்த்தைகள் விளங்கப் பண்ணுவதைக் காணுங்கள்:*

> *கம்யூனிஸ்ட்களாகிய எங்களுக்கு உயர்ந்த இடையூறு நிலையுள்ளது. நாங்கள்தான் துப்பாக்கியால் சுடப்பட்டும் துக்கிலிடப்பட்டும் பரியாசம் பண்ணப்பட்டும் எங்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டும் வேறு அநேக வழிகளிலும் எந்த அளவுக்கு அமைதியை இழக்க வைக்க முடியுமோ அந்த அளவுக்கு துன்புறுத்தப்படுகிறோம். எங்களில் குறிப்பிட்ட சதவிகிதத்தினர் கொல்லப்படுகின்றனர் அல்லது சிறைவைக்கப் படுகின்றனர். நாங்கள் உண்மையிலேயே ஏழ்மையில் வாழ்கிறோம். நாங்கள் உயிர்பிழைக்கத் தேவையானதுக்குமேல் முற்றிலும் ஒவ்வொரு பைசாவையும் கட்சிக்கே கொடுத்து விடுகிறோம்.*
>
> *கம்யூனிஸ்ட்களாகிய எங்களுக்கு சினிமா பார்க்கவோ அல்லது இசைக் கச்சேரிகளை ரசிக்கவோ அல்லது லாலிபாப், இறைச்சி துண்டுகளை ருசி பார்க்கவோ அல்லது நாகரிகமான வீட்டில் குடியிருக்கவோ அல்லது புதிய கார்களை வாங்கவோ நேரமில்லை, பணமும் இல்லை. எங்களை வெறிபிடித்தவர்கள் என கூறுவதுண்டு. நாங்கள் எங்கள் கொள்கையில் வெறியர்கள்தான். எங்கள் வாழ்வுகள் ஒரு பெரிய இருளால் சூழப் பட்டுள்ள உண்மையால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது: அது உலகக் கம்யூனி*

ஸத்துக்கான போராட்டம். எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்க முடியாத வாழ்க்கைத் தத்துவம் எங்களிடம் உள்ளது. போராட ஒருக்காரணமும் வாழ ஒரு தெளிவான நோக்கமும் எங்களிடம் உள்ளது. மிகப் பெரிய மனுஷத் தன்மைக்கான இயக்கத்தில் எங்களுடைய தனிப்பட்ட தேவைகளெல்லாம் ஒரு எஞ்சிய தேவையே; எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை கடினமாகத் தோன்றினாலோ கட்சிக்காக முதலியம் கொடுத்ததினால் எங்களுடைய கௌரவம் பாதிக்கப் பட்டாலோ, மனித மேன்மைக்காக எங்களில் ஒவ்வொருவரும், தன்னால் இயன்ற சிறியளவில் ஏதாவது ஒரு புதியதும் உண்மையுமான செயலால் முழு திருப்தியடைய ஈடு செய்யப்படுகிறது.

ஒரு காரியத்தில் நான் மிகவும் உறுதியாய் இருக்கிறேன்; அதுதான் கம்யூனிஸக் காரணி, அதுவே என் உயிர், என் தொழில், என் பக்தி, என் பொழுது போக்கு, என் இனிய இருதயம், என் துணைவி, ... என் உணவும் என் இறைச்சியும், அதற்காகவே நான் பகலில் உழைக்கிறேன் இரவிலே கனவு காண்கிறேன். அதன் மீதுள்ள எனது பிடிப்பு காலம் செல்லச் செல்ல வளர்கிறது, தேய்வதில்லை; ஆதலால், நான் ஒரு நட்புறவைத் தொடரவோ ... அல்லது அதைத் தொடர்பு படுத்தாமல் உரையாடவோ இயலாது ஏனெனில் இந்தசக்தி என்னை உந்துகிறது. நான் ஜனங்களின் பார்வைகள், கருத்துக்கள், செயல்கள் ஆகியவைகள் கம்யூனிஸ கொள்கைகளுடன் எப்படி பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது குறித்தும் அதினிமித்தம் அவர்களுடைய எண்ணங்களையும், நான் மதிப்பிடுகிறேன். நான் ஏற்கனவே சிறைவைக்கப்பட்டுள்ளேன், ஏனெனில் எனது உயர்ந்த குறிக்கோளின் நிமித்தமே, மேலும் தேவைப்படுமேயாகில், என்னைச் சுட்டுத் தள்ளும் படைக்கு முன்பாகவும் போக நான் தயராயிருக்கிறேன்.[1]

இப்படிப்பட்ட பக்தி ஒருவரின் உணர்வுகளை ஆட்டிப் படைக்கும் சக்தி பெற்றது! கிறிஸ்தவனின் வாழ்க்கை அவனைச் சுற்றியிருக்கும் நபர்களின் பார்வையில் அவனுடைய எண்ணங்கள் அவனை ஆட்டிப் படைப்பது போல் தோன்றும். அவனுடைய வாழ்க்கையில் எல்லாமே பக்தி எனும் குவி (குழி) வட்டக் கண்ணாடி வழியாய் பார்ப்பது போன்றது. அவன் தனது கிறிஸ்தவத்தில் வாழ்வதை ஒரு பெரிய நிம்மதியாக காணுகிறான். இந்த ஆட்டிப் படைக்கும் தேவபக்தி தெரிந்து எடுப்பதற்கு சம்பந்தமில்லாத அளவுக்கு எல்லை கடந்த நிலையில் அவனுடைய வாழ்க்கையை ஆட் கொள்வதல்ல. மாறாக, வாழ்க்கைத் தெரிவுகளுக்கு பக்தியே அடிப்படை. கர்த்தருக்குச் செலுத்தும் பக்தியினால் தான் கிறிஸ்தவன் வாழ்கிறான், தெரிவு செய்து கொள்கிறான், செயல்படுகிறான் மற்றும் அதைச் செய்யும் போது அதை விரும்புகிறான்! இந்த கட்டாயப்படுத்திக் காட்டும் தேவபக்தியை விளக்கப்படுத்தும் பொருட்டு எண்ணற்ற உதாரணங்கள் வசனங்களினூடே கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு காசுகளை காணிக்கையாகப் போட்ட விதவை தனது கடைசி காசுகளைப் போட்டதினால் தேவனுக்கு அவள் செலுத்தின பக்தி எந்த அளவுக்கு இருந்தது என்பதைக் காட்டுகிறது (மாற்கு 12:42-44). எப்பாப்பிராதீத்து சகோதரர்களுக்கு உதவி செய்யத்தக்கதாக அவனது பக்தி அவனைக் கட்டுப்பாட்டுடன் நடத்தியது என்பது எப்பொழுதும் அறியப்பட்டவன் (பிலிப்பியர் 2:25-30). பழைய ஏற்பாட்டு வரலாற்றில் கித்தியனாகிய ஈத்தாயைக் குறித்து சொல்லப்படும் ஒரு நிகழ்ச்சியுண்டு,

*அவன், தாவீதுக்கு தான் காட்டிய கடமையுணர்வை வெளிப்படுத்தி, "ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கேயிருப்பாரோ, அங்கே உமது அடியானும். செத்தாலும் பிழைத்தாலும், இருப்பான் என்று கர்த்தருடைய ஜீவனையும் என் ராஜாவாகிய ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்" என்றான் (2 சாமுவேல் 15:21). காலேபின் பக்தியை யார் மறக்க முடியும்? இந்த தேவபக்தியுள்ள மனுஷன் தேவனுடைய புகழ்ச்சிக்குள்ளானவனாக, "என்னுடைய தாசனாகிய காலேப்" என்றழைக்கப் பட்டான். காலேப் ஏன் வித்தியாசப் படுத்திக் காட்டப்பட்டார்? தேவனுடைய சொந்த வார்த்தையே இதற்குப் பதிலளிக்கிறது: "என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும்! உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும்" (எண்ணாகமம் 14:24).*

*நீங்கள் இப்பொழுது ஒரு கிறிஸ்தவனாயிருப்பதால், நீங்கள் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த பக்தி வாழ்க்கையை வாழ்கிறீர்கள்! அது ஒரு சுத்திகரிக்கப் பட்ட வாழ்க்கை, பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை. அது தேவனை விசுவாசித்து அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய தீர்மானிப்பதற்கு முன்பிருந்ததை விட முற்றிலும் வித்தியாசப்பட்ட ஒரு வாழ்க்கை. பக்தியுள்ள வாழ்க்கை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் நிறைந்த வாழ்க்கை!*

*எபேசியர் 5:1-7 கிறிஸ்தவனின் பக்தி பற்றி விவரிக்கிறது! இப்பொழுதுதான் பவுல் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களின் வாழ்க்கை முறை உலகத்தில் வாழ்பவர்களிடமிருந்து எப்படி முற்றிலும் வித்தியாசப்பட்டது என்பதைக் குறிப்பிட்டார் (4:17-32). அந்த விளக்கத்தைத் தொடர்ந்து, உடனடியாக பவுல், "ஆதலால்" ... என்று துவங்குகிறார், வாழ்க்கை முறை வித்தியாசம் தேவபக்தியின் விளைவால் வந்த மாற்றம் என்று குறிப்பிடுகிறார். கிறிஸ்தவன் தேவனுடைய நிலைக்கு ஏற்ப ஒப்புக்கொடுத்த பக்தியுள்ளவனாயிருக்கிறான், உலகத்தாரைப் போன்றல்ல. அவன் பாவத்துக்கும் உலகத்துக்கும் "மரித்து" தேவனுக்கென்று "பிழைத்திருக்கிறான்" (ரோமர் 6:11). கிறிஸ்தவனின் பக்தி தேவ காரியங்களை மையம் வைத்துள்ளதேயன்றி உலகத்தை மையம் வைத்து அல்ல என்பதைக் காட்டும் இந்த வசனப் பகுதியை உன்னிப்பாகக் காணுங்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏதோ சிலவற்றிற்கு ஒப்புக்கொடுத்திருக்கலாம். ஏதோ சில அரசியல் காரணங்களுக்காகவோ, பணம் பெறும் நோக்கத்திற்காகவோ, அல்லது மனிதநேய வரைவுத் திட்டங்களுக்காகவோ அநேகர் தங்களை ஒப்புக்கொடுத்து அதிலே பக்தியாயிருக்கிறார்கள். கிறிஸ்தவராகிய நீங்கள், தேவனுக்கு ஒப்புக் கொடுத்த பக்தியை விளங்கப்பண்ண வேண்டும்!*

## அன்பிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது (5:1)

*"பிரியமான பிள்ளைகளைப் போல," என்று பவுல் பேசியபோது அவர் கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கிற அங்கத்தினர்களைக் குறிப்பிட்டார், அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு கீழ்ப்படிந்தவர்கள் (யோவான் 14:15). அது தேவன் உலகத்தில் அன்புகூர்ந்ததினால் அவருடைய பிள்ளைகளும் அவரிடத்திலும் அவர்களில் ஒருவருக்கொருவர் அன்புகூருகிறார்கள் (1 யோவான் 4:19). மனமாற்றப்பட்டவர் ஒரு குழந்தையின்மீது தேவன் பாராட்டும் அன்பு பெற்றோரின் அன்பைக் காட்டிலும் அதிகமான ஒப்புக்கொடுத்தலைக் கொண்டது என்பதை புரிந்து கொள்ளுகிறார். ஒருவர் தேவன் தன்னை*

எவ்வளவாய் நேசிக்கிறார் என்று அறிந்து கொள்ளும்போது, இயல்பாக அவரும் தேவனை திருப்பி அன்புகூருகிறார். இந்த அன்பு உலகத்தில் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு பாதுகாப்பையும் மனதிருப்தியையும் அளிக்கிறது! தேவன் உங்களை எவ்வளவாய் அன்புகூருகிறார் என்று நீங்கள் அறிந்து கொள்வதால், இப்பொழுது நீங்கள் தேவனிடத்தில் உங்கள் அன்பை வெளிப் படுத்துகிறீர்கள் (கலாத்தியர் 2:20).

இப்பொழுது நாம் படித்துக் கொண்டிருக்கும் பாடம் அன்புக்கு ஒப்புக் கொடுத்த பக்தி கிறிஸ்தவர்களை குறிப்பிட்ட வழிகளில் வளரும்படி வலியுறுத்துகிறது. *கிறிஸ்தவர்கள் தேவனைப்போல் "இருக்க" விரும்புகிறார்கள்.* இந்த வசனத்திலுள்ள "இருக்க" எனும் பதம் படிப்படியாக விருத்தியடைவதை வெளிப்படுத்தும் கிரேக்க பதம். கிறிஸ்தவன் தேவனைப் பின்பற்றுகிறவன். தேவனைப் போலிருக்க தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகிறவனாயிருக்கிறான். இது உடனடியாக நிறைவேறிவிடாது, இதற்கு கால அவகாசம் தேவை. புது கிறிஸ்தவனாக நீங்கள், இந்த செயல்முறையை துவங்கிவிட்டீர்கள்! இலக்கைப் பெற குறிக்கோளிலே நீங்கள் கவனம் வைக்க வேண்டும்!

கிறிஸ்தவர்கள் தேவனைப் "பின்பற்றுபவர்கள்." "பின்பற்றுபவர்கள்" என்பது *mimetes* என்ற கிரேக்க வேர் வார்த்தையிலிருந்து வருகிறது. இதிலிருந்துதான் நாம் "mimic" என்ற ஆங்கில வினைச்சொல்லைப் பெறுகிறோம். இந்தப் பதம் "மற்றவர்களைப் பார்த்து அதேபோல நடந்து கொள்வது" என்று பொருள். கிறிஸ்தவர்கள் தேவனைப் போலவே நடந்து கொள்ள அவருடைய உதாரணங்களைப் பின்பற்றி அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிபவர்கள். சிறு பிள்ளைகள் தங்கள் பெற்றோரைப்போலவே அடிக்கடி நடந்து கொள்ள முற்படுவார்கள். ஒரு மகனைப் பார்த்து அவன் தன் அப்பாவைப் போலவே இருப்பதாகச் சொல்லப்படுவதோ அல்லது ஒரு மகளைப் பார்த்து அவள் தன் தாயைப்போலவே இருப்பதாகக் கூறுவதும் வழக்கத்துக்கு மாறான விஷயமல்ல. அதே போலதான், கிறிஸ்தவர்கள் பரலோகத்தின் பிதாவைப் பின்பற்றுகிறவர்களாயிருக்க வேண்டும். காலப்போக்கில், நாம் அவரைப் போலவே இருப்போம். தற்போது தான் தங்கள் கிறிஸ்தவ நடக்கையைத் துவங்குகிறவர்கள் தேவனைப் பின்பற்றக் கூடியவர்களாய் மறுரூபமாகும் செயல் நிலையைத் தொடங்கியிருப்பது குறித்து பரவசப்பட வேண்டும்!

கிறிஸ்தவர்கள் தேவனுக்குப் "பிரியமான பிள்ளைகள்" என்று அறியப்பட்டிருக்கிறார்கள். ஒரு பிள்ளைக்கும் உலகப்பிரகாரமான அவனுடைய தகப்பனுக்குமிடையிலான உறவு போலவே, கிறிஸ்தவனின் ஒப்புக்கொடுத்தல் அவனுடைய பரலோக பிதாவுடன் இருக்கிறது. "ஒரு குழந்தை தான் - என்பவரின் மகன் [அல்லது மகள்]" என்பதிலே ஒரு தனிப் பெருமிதம் அடைந்து தனது தகப்பனை மதிப்போடும் அன்போடும் பார்க்கிறான். தனது தகப்பன் தன்னிடத்தில் மிகவும் பலமான அன்பினால் நேசிக்கிறார் என்பதை அறிந்து கொள்வதிலே இந்த பெருமிதம் தீவிரமாக அவனிடத்தில் இடம் பெறுகிறது! புதிய கிறிஸ்தவனாகிய நீங்கள், இப்போது இந்த நட்புறவை பரலோகத்தின் பிதாவிடத்தில் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் தேவனுக்குப் பிரியமான பிள்ளை என்று உங்களுக்கு உறுதியளிக்கப் படும்போது எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்!

கிறிஸ்தவர்கள் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தவர்கள். இந்த ஒப்புக்

கொடுத்தலின் பக்தி முறுமுறுப்போடு சட்ட ஒழுங்குகளுக்கு கீழ்ப்படிவதால் விளங்கப்பண்ண முடியாது. இணக்கமில்லாத ஆவிக்குரிய ஒழுங்குகளைப் பின்பற்றுவது அல்லது எத்தனை முறை ஜெபித்தீர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பது உங்கள் பக்தியை பராமரிக்காது. நீங்கள் அறிக்கையிட்ட பாவங்களையெல்லாம் வரிசைப்படுத்தி வைத்திருப்பது உங்கள் பக்தியை பராமரிக்க உறுதியளிப்பதில்லை. மாறாக, உங்கள் பக்தியை தேவனிடத்திலும் அவருடைய அன்பின் குமாரனிடத்திலும் ஒருமுகப்படுத்துவதால் நீங்கள் (உங்கள் பக்தியை) பராமரிக்க வேண்டும், அவர் "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தம்மை நமக்காக ஒப்புக்கொடுத்தவர்," என்று அடுத்த வசனத்தில் சொல்லப் பட்டுள்ளது.

## ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது (5:2)

தேவனிடத்தில் நீங்கள் கொண்டுள்ள அன்பு அவருக்கு நீங்கள் ஊழியம் செய்யும்படி தீவிரப்படுத்துகிறது (யோவான் 14:15). நீங்கள் நற்கிரியைகளைச் செய்கிறீர்கள், ஏனெனில் நீங்கள் பரலோகத்திலுள்ள உங்கள் பிதாவை நீங்கள் மகிமைப்படுத்த விரும்புகிறீர்கள். இந்தக் கடமையுணர்வைக் கொண்டிருப்பது "அன்பில் நடப்பதாகும்." உங்கள் வாழ்க்கையின் அனைத்துக் காரியங்களும் தேவனிடத்தில் நீங்கள் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துகிறது! இயேசு கிறிஸ்துவை உதாரணமாகப் பயன்படுத்தி இந்த ஊழியத்தை பவுல் விளக்கப் படுத்துகிறார். நீங்கள் "அன்பிலே நடக்க வேண்டியவர்," "நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்ததுபோல." கிறிஸ்தவர்களின் தர நிர்ணயம் இதுவே. யாரோ சிலர் இருக்கிறார்கள் என்பதற்காக நீங்களும் ஊழியக்காரராயிருக்க வேண்டாம் அல்லது நீங்கள் ஊழியம் செய்யாவிட்டால் உங்கள் குற்ற உணர்வு உங்களை உறுத்தக் கூடும், என்பதற்காகவும் வேண்டாம். மாறாக, நீங்கள் தேவனிடத்தில் அன்புகூர்ந்து பரலோகப் பிதாவை பிரியப் படுத்த விரும்புவதால் நற்கிரியைகளைச் செய்யுங்கள்.

தேவனுக்கு ஊழியம் செய்வதில் நீங்கள் பிரியப்படக்கூடும்! ஊழியம் செய்வதால் அதிலே ஒரு ஆவலும் மனக்கிளர்ச்சியும் உங்களுக்குக் கிடைக்கும். மேலும், கிறிஸ்துவைப் போன்ற ஊழியக்காரனாயிருப்பதால் அற்புதமான மன நிம்மதியை நீங்கள் அடைவீர்கள். நீங்கள் கர்த்தருக்கு பரிசுத்தமாக்கப்பட்ட பக்தியைச் செலுத்துவதால் இந்த ஆசீர்வாதங்கள் அதன் பலன்.

5:2ல் பவுல் கிறிஸ்துவின் ஒப்புக்கொடுத்த ஊழியத்தின் இரண்டு தோற்றங்களைக் குறிப்பாக குறிப்பிடுகிறார். *கிறிஸ்து தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.* "ஒப்புக்கொடுத்தார்" எனும் வார்த்தை தேவபக்தியின் *எண்ணப்போக்கை* வெளிப்படுத்தும் ஒரு வார்த்தை. தங்கள் ஆராதனையிலே தேவனிடத்தில் நெருங்கிச் சேர்வதைக் குறிக்கும் பழைய ஏற்பாட்டுச் சொல் (காண்க லேவியராகமம் 1:2). ஆராதிக்க வருபவர் தேவனிடத்தில் கிட்டிச் சேர வேண்டுமானால், தாழ்மையாயும் தேவனுடைய ஒழுங்கு விதிகளை மனமுவந்து ஏற்கும் தன்மையோடும் வரவேண்டும். தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிகிற எண்ணமுடையவராயிருக்க வேண்டும். அன்பு, பாராட்டு, மற்றும் ஒப்புக்கொடுத்தலைக் காண்பிக்கும் பொருட்டு பலி செலுத்தப்பட்டது. ஒவ்வொரு பலியும் தேவனைக் கனப்படுத்தும்படி செய்யப்பட்டது. *கிறிஸ்துவும் தம்மை பலியாக ஒப்புக் கொடுத்தார்.* "பலி" எனும் சொல் ஒப்புக்கொடுத்தலின்

செயலைக் குறிக்கிறது. தேவன் பலியிடுதலை ஒழுங்குபடுத்தி பலிசெலுத்துவதற் கென்று கொடுக்கப்பட்ட குறிப்புக் கட்டளைகளை பின்பற்றினவர்களை தேவன் ஆசீர்வதித்தார். பவுல் இதே செயலை கிறிஸ்துவுக்குள் செய்யப்படுவதை விளக்கிப் பேசுகிறார், "பலியாக ஒப்புக்கொடுத்து," "நம்மில் அன்புகூர்ந்தது போல." கிறிஸ்து "செய்தது போல" கிறிஸ்தவனும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறான், கீழ்ப்படிதல் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது!

ஒருவர் நற்கிரியையைச் செய்வதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும்போது தம்மைத்தாமே "பலியாக்குகிறார்." உங்களின் இந்த ஊழியத்தை தேவன் "ஆசீர்வதிக்கப்பட்ட பலியாக" கண்ணுறுகிறார். உங்கள் பலிகளுக்கு எல்லை இல்லை ஏனெனில், கிறிஸ்துவைப் போல நீங்களும், அன்புகூர ஒப்புக் கொடுத்துள்ளீர்கள்! ஒரு கிறிஸ்தவன் சபையின் ஊழியக் காரியங்களில், தான் ஆதிக்கம் செலுத்தப் பட்டாலும் கூட, ஏன் ஈடுபட வேண்டும்? ஏனெனில் அவர் கிறிஸ்துவைப்போல தன் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்ததினால்!

## மதிப்பிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது (5:3-7)

கிறிஸ்தவர்களின் அன்பும் ஊழியமும் மதிப்பிற்குரிய செயல்களில் நிறைவுறுகிறது. மனமாற்றப் பட்டவருக்கு எல்லாம் புதிதாகுகிறது (காண்க 2 கொரிந்தியர் 5:17). இந்த "புதிதான ஜீவன்" (ரோமர் 6:4) சபையின் அன்றாட செயல்பாடுகளில் காணப்படும். தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக, உங்கள் பரலோக பிதா நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படி வாழ்கிறீர்கள். கிறிஸ்தவ வாழ்க்கை முறையில் வாழத் தெரிவு செய்து கொள்வது எப்பொழுதும் உங்களுக்கு அமைதியையோ வாய்ப்புக்களையோ கொடுத்துவிடாது. எப்படியிருப்பினும், தேவனைப் பின்பற்றுகிற நீங்கள், தேவன் எப்படி வாழ வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படி வாழத் தெரிந்து கொள்ளுங்கள். வசனங்கள் 3லிருந்து 7வரை, மதிப்பிற்குரிய நடத்தையுடன் வாழ பவுல் சில குறிப்பான வழிகளைக் குறிப்பிடுகிறார்.

*செயல்களினாலே மரியாதைக் காட்டப்படுகிறது* (வசனம் 3). உலகின் செயல்பாடுகளிலிருந்து நீங்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் (1 பேதுரு 1:22). தேவனுடைய பிள்ளையாகிய நீங்கள், சில செயல்களில் பங்குபெறக் கூடாது (2 பேதுரு 3:14). கிறிஸ்தவர்கள் சில செயல்களைச் செய்யக் கூடாது, சில பொருட்களை நாடித் தேடக் கூடாது (1 தீமோத்தேயு 5:22). கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்பட்ட ஒருவர் பாவத்துக்கு நடத்தக்கூடிய தெரிவுகளை மனமுவந்து ஏற்பதை தடுத்து நிறுத்த வேண்டும். கிறிஸ்தவர்களாகிய, நாமும் கூட, பூரணப்படாதவர்களானபடியால் தொடர்ந்து பாவம் செய்யக் கூடும்; ஆகிலும் அது உலகக் காரியங்களில் நம்மை உட்படுத்தி பாவத்தைக் குறித்த எச்சரிக்கையற்றிருப்பதிலிருந்து அது வித்தியாசமானது. மனமாற்றத்துக்குப் பின் ஏற்படும் நடத்தை மாற்றம் "இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப் படவுங் கூடாது" என்ற முக்கியமான சொற்றொடரினால் வலியுறுத்துகிறார். மேலும் கூடுதல் வலியுறுத்தல் மூலப் பாஷையில் காணப்படுகிறது. இதன் விளைவாக திருமறையும் கட்டளையிட்டு, "இவைகளின் பேர் முதலாய் ஒருமுறைகூடச் சொல்லப்படக் கூடாது!" என்று சொல்லப்படுகிறது. சில இடங்கள் கிறிஸ்தவர்கள் செல்ல தகுதியில்லாத இடங்களாயிருக்கின்றன ஏனெனில் அப்படிப்பட்ட

இடங்களுக்கு போவது குறித்து பேசுவது கூட வெட்கத்துக்குரியதும் மன உளைச்சலுக்குரியதுமாகும்! (ரோமர் 6:21ஐ காண்க.) இப்படியொரு பலமான வலியுறுத்தல் இங்கே கொடுக்கப்படக் காரணம் என்ன? ஏனெனில் சில இடங்களில் ஊக்கப்படுத்தப் படும் நடத்தைகள் "பரிசுத்தவான்களுக்குள்ளே பொருத்தமாயிராது."

*மதிப்புடைமை எண்ணங்களால் ஆளப்படுகிறது* (வசனம் 4). செயல்கள் எண்ணங்களின் உற்பத்திப் பொருள். கிறிஸ்தவனின் எண்ணம் தூய்மையை விளங்கப் பண்ணுவது. ஒருவரது வார்த்தைகள் அவனது இருதயத்தின் நிலையை வெளிப்படுத்துகிறது என்று கர்த்தர் சொன்னார் (மத்தேயு 12:34-37). பவுல் எபேசியருக்கு இந்த உண்மையை நினைப்பூட்டினார். கிறிஸ்துவின் முகவர்களாக இருப்பவர்கள் தாங்கள் பயன்படுத்தும் வார்த்தைகளைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும். அவைகள் "அசுத்தமானவைகளாகவோ" (அருவருக்கத்தக்க, கெட்ட வார்த்தைகளாக) அல்லது "புத்தியீனமானவைகளாகவோ" (அறிவற்றதும் முன்பின் யோசிக்காமல் இந்த வார்த்தைகளை கேட்பவர்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்று நினையாமல் பேசும் வார்த்தைகள்) அல்ல. கிறிஸ்தவர்களின் வார்த்தை நடை தன்னைச் சுற்றிலுமிருக்கிறவர்களின் வார்த்தைகளிலிருந்து கூர்மையான வேறுபாட்டைக் கொண்டிருக்க வேண்டும்: தூய்மையை வலியுறுத்தக் கூடியதாகவும், "ஸ்தோத்திரம் செலுத்தக்" கூடியவைகளுமாயிருக்க வேண்டும். புதிய கிறிஸ்தவன் தனது நாவைக் கட்டுப்படுத்திக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்! இது ஒரு கடினமான வேலை தான், ஆகிலும் செய்ய முடியும்!

*மதிப்புடைமை உறுதித்தன்மையால் பலனளிக்கப்படுகிறது* (வசனம் 5). கிறிஸ்தவன் மதிப்புடன் வாழ்கிறான் ஏனெனில் அப்படிப் பட்ட முறையில் வாழ்பவர்களுக்கு தேவன் பெரிய ஆசீர்வாதங்களை உறுதி அளித்திருக்கிறார். மனந்திரும்பத் தவறுகிறவர்களும் தங்களுடைய பாவ செயல்களை மாற்றிக் கொள்ளாதவர்களும் அவர்கள் அழிவுக்குள்ளாகியிருப்பதை மிகத் தாமதமாக உணருவார்கள். பாவத்தைத் தொடர்ந்து செய்வதைத் தவிர்த்து தேவனுடைய பிள்ளையாக ஒருவர் மாறாத பட்சத்தில், தேவனுடைய, கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் "சுதந்திரத்தை அனுபவிக்க இயலாது"! கிறிஸ்துவினிடத்தில் திரும்பிய ஒருவர் இந்த வசனத்தினால் பெரியதொரு ஊக்கத்தை பெற முடியும். நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய முயற்சிக்கிறீர்கள். நீங்கள் தேவனைப் பின்பற்றும் செயல் முறையில் இருக்கிறீர்கள். நீங்கள் பாவம் செய்யும்போது, தேவனுடைய கிருபையான பாவமன்னிப்பு உங்களுக்கு உள்ளது. மேலும் பரலோகத்தின் சுதந்திரத்திற்கான உறுதியும் அளிக்கப்பட்டுள்ளது (எபிரெயர் 6:18, 19).

*மதிப்புடைமை மக்கள் குழுவால் ஊக்கமளிக்கப்படுகிறது* (வசனங்கள் 6, 7). ஒருவர் தான் மதிக்கப்பட வேண்டுமானால் அவர் மதிப்புடைய மக்களோடு சேர்ந்தியங்க வேண்டும்! நீங்கள் மனம் மாறி கிறிஸ்தவனான போது, நீங்கள் பாவச் செயல்களிலிருந்து திரும்பியதால் அது உங்களுக்கு மகிழ்வான அனுபவத்தைக் கொடுத்திருக்கக் கூடும். நீங்கள் விட்டு வந்த செயல்களை மீண்டும் போய் அனுபவிக்கும்படி சாத்தான் உங்களைத் தொடர்ந்து சோதிப்பான். சாத்தானின் பலமான சோதனை உங்களுடைய கடந்த கால நட்பின் மூலமாக மீண்டும் உலகத்துக்கு இழுக்க கூடிய முயற்சிதான் (1 கொரிந்தியர் 15:33 காண்க). கிறிஸ்துவினிடத்தில் நீங்கள் கொண்டுள்ள பக்தியைத் தடுக்க உங்களுடைய

*கடந்தகால நண்பர்கள் இருப்பார்களேயாகில் அதை நீங்கள் வெட்டி விடுவது நல்லது (காண்க மத்தேயு 10:34-39). தேவனைப் புறக்கணிப்பவர்களோடு உங்களுக்கு பங்கில்லை எனுமளவுக்கு நீங்கள் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்திருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 6:17, 18; 1 யோவான் 2:15-17).*

## நிறைவுறும் சிந்தனைகள்

*கிறிஸ்தவன் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒப்புக் கொடுத்தலின் பக்தி ஒருவர் தேவனுடைய பெரிதான அன்பை புரிந்து கொள்வதிலே துவங்குகிறது, அது தன்னைத் தானே சுய விருப்பப் "பலியாக" தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலை விளக்கப்படுத்துகிறது (ரோமர் 12:1, 2). ஆட்கொண்ட தெய்வபக்தி கிறிஸ்தவனை வாழவைக்கிறது, பேசவைக்கிறது, மதிப்புமிக்க மக்கள் நட்பைப் பெற வைக்கிறது.*

*தேவனுக்கு ஒப்புக் கொடுத்தல் ஒரு கடினமான அறைகூவல், ஏனெனில் சாத்தான் தன்னால் ஆன எல்லா வகையிலும் கிறிஸ்தவர்களை, உலகக் காரியங்களில் பங்குபெறச் செய்து, தேவ ஆராதனையை தவறானவைகளோடு ஒத்துபோகச் செய்யும் கூட்டங்களை அமைக்கச் செய்யும். அப்படிப்பட்ட தவறானவைகளோடு ஒத்துபோதலை ராஜாவாகிய அமத்சியா சித்தரிக்கிறார். திருமறை சொல்லுகிறது, "அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனாகிய தாவீதைப் போலல்ல" (2 இராஜாக்கள் 14:3அ). தவறோடு ஒத்துபோன ஆராதனையைச் செய்தபடியால் ராஜா எதிர்பாராத ஆபத்தை சந்தித்து தேவனுடைய மகிமையை குறைவுபடச் செய்தான் (2 இராஜாக்கள் 14:12-14). தேவனுக்கு பிரியமாயிருக்க, உங்கள் ஒப்புக்கொடுத்தல் எபேசியர் 5:1-7ல் கட்டளையிடப்பட்டதைப்போல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!*

---

*குறிப்பு*

[1]Charles R. Swindoll, *The Tale of the Tardy Oxcart and 1,501 Other Stories* (Nashville: Word Publishing, 1998), 96.